**DINAMALAR 24.01.2025**

# பார்லி., குழு ஆலோசனை கூட்டம் மத்திய வனத்துறை அமைச்சர் பங்கேற்பு

**கோவை, ஜன. 24–**

கோவை, ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநில வனப் பணிக்கான மத்திய உயர் பயிற்சியகத்தில், வனத்துறை சார்ந்த பார்லி., குழு ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடுகளுக்கான அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமை வகித்தார். இணை அமைச்சர் கீர்த்தி வர்தான் சிங், எம்.பி.,க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், அலோக் சர்மா அடங்கிய குழு மற்றும் வனத்துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

வழக்கமாக டில்லியில் கூடும் இக்கூட்டம் முதல் முறையாக கோவையில் நடந்தது. வனவளம், வன உயிரினங்கள், வனப்பரப்பு, வனம் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

முன்னதாக, இவ்வளாகத்தில், 'அம்மாவின் பெயரில் ஒரு மரம்' திட்டத்தின் கீழ், அமைச்சர் பூபேந்தர் யாதவ் மரக்கன்று நட்டார்.



■ கோவை இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மத்திய வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் திறந்து வைத்து பார்வையிட்டார்.

ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து, பார்லி., குழுவினர், புகைப்படம் எடுத்துக் கொண்டனர். தொடர்ந்து, இவ்வளாகத்தில் அமைந்துள்ள, 'காஸ்' அருங்காட்சியகத்தை அமைச்சர் மற்றும் எம்.பி.,க்கள் பார்வையிட்டனர்.

இந்திய வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் திறந்து வைத்தார். தொடர்ந்து, ஆய்வகங்களைப் பார்வையிட்டு, விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார்.

மாநில வனப்பணிக்கான மத்திய உயர் பயிற்சியக முதல்வர் திருநாவுக்கரசு, நிறுவன இயக்குனர் குட்டிக் கண்ணன் மற்றும் உயரதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்றனர்.